58



OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
6 JUN 1912
MADRAS.

உ

சத்குரவே நம:

திருச்சிற்றம்பலம்.

# திருச்சிற்றேமச் சிவக்ஷேத்திரவிளக்கம்.

திருக்களர்
தி. மு. சுவாமிநாத உபாத்தியாயரால்
எழுதியது.

திருச்சிற்றேமங்கோவில் பஞ்சாயத்தாராகிய
களப்பாள்
குமரப்ப முதலியாரவர்களால்
நாகபட்டணம்
"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பெற்றது.

1912.

Q23:38.214J
N12
168566

உ

சத்குரவே நம:

திருச்சிற்றம்பலம்.

# திருச்சிற்றேமச்

# சிவக்ஷேத்திரவிளக்கம்.

திருக்களர்

இ. மு. சுவாமிநாத உபாத்தியாயரால்

எழுதியது.

திருச்சிற்றேமங்கோவில் பஞ்சாயத்தாராகிய

களப்பாள்


குமரப்ப முதலியாரவர்களால்

நாகபட்டணம்

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

1912.



உ

கணபதி துணை.

# திருச்சிற்றேமச் சிவக்ஷேத்திர விளக்கம்

காப்பு

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை யுண் ணுடு.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வேதாகம விபவாநந்த சாக்ஷாத்காரமாயும், பரிபூரணராயும், சச்சிதாநந்தராயும், விபுவாயும், அருவாயும், உருவாயும், அருவுருவமாயும், ஆதிமத்தியாந்தரகிதராயும், விளங்குமெண்குணக்கடவுளாகிய நமது பரமேஸ்வரன் தமது அடியார்களுடைய பக்குவாபக்குவத்துக்குத் தக்கபடி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை யளித்தாள்வதற்கான திருவுருவுடனெழுந்தருளியிருக்கின்ற சிவதலங்களுள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனர், இம்மூவரோதிய தேவாரம் பெற்றுள்ள ஸ்தலங்கள் இருநூற்று எண்பத்து நான்கு, அவற்றுள் சோழவள நாட்டிலேயுள்ள ஸ்தலங்கள் நூற்றுத் தொண்ணூறு. இவற்றுள் காவிரிநதிக்குத் தெற்கேயுள்ள ஸ்தலங்கள் நூற்று இருபத்தேழு. அதனுள் திருக்களர் சிவக்ஷேத்திரத்திற்குத் தென்கிழக்கிலே (இரண்டரை மைல் தூரத்திலே) விளங்காநின்ற திருச்சிற்றேமமுமொன்றாம்.

## திருச்சிற்றேமம்.

தேவாரம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளியது.

பண்—கொல்லிக் கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள் வாண்முகமாதர் பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள் சூடியோராடன்மேய கொள்கையான் [தான்
சிறைவண்டியாழ் செய் பைம்பொழிற் பழனஞ்சூழ் சிற்றேமத்
இறைவனென்றே யுலகெலாமேத்த நின்ற பெருமானே. 1

மாகத்திங்கள்வாண்முக மாதர்பாட வார்சடைப்
பாகத்திங்கள் சூடியோராடன்மேய பண்டங்கன்
மேகத்தாடு சோலைசூழ்மிடை சிற்றேமமேவினன்
ஆகத்தோர் கொளாமையைப்பூண்ட வண்ணலல்லனே. 2

நெடுவெண்டிங்கள் வாண்முகமாதர்பாட நீள்சடைக்
கொடுவெண்டிங்கள் சூடியோராடன்மேய கொள்கையர்ன்
படுவண்டியாழ்செய் பைம்பொழிற்பழனஞ்சூழ் சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினற் காய்ந்தகடவுளல்லனே. 3

கதிரார்திங்கள் வாண்முகமாதர் பாடக் கண்ணுதல்
முதிரார் திங்கள் சூடியோராடன்மேய முக்கணன்‡
எதிரார் புனலம்புன் சடையெழிலாருஞ் சிற்றேமத்தான்
அதிரார் பைங்கணேறுடையாதி மூர்த்தியல்லனே. 4

வானூர் திங்கள் வாண்முக மாதர்பாட வார்சடைக்
கூனூர் திங்கள் சூடியோராடன்மேய கொள்கையான்
தேனூர் வண்டு பண்செயுந்திருவாருஞ் சிற்றேமத்தான்
மானூர் விழிநன்மாதொடும் மகிழ்ந்தமைந்தனல்லனே. 5

பனிவெண்டிங்கள்வாண்முக மாதர்பாடப் பல்சடைக்
குனிவெண்டிங்கள் சூடியோராடன்மேய கொள்கையான்
தனிவெள்விடையன் புள்ளினத்தாமஞ்சூழ் சிற்றேமத்தான்
முனிவுமூப்பு நீக்கிய §முக்கண்மூர்த்தியல்லனே. 6

கிளருந்திங்கள் வாண்முகமாதர் பாடக்கேடிலா
வளருந்திங்கள் சூடியோராடன்மேய மாதவன்
தளிருங்கொம்பு மதுவுமார்தாமஞ்சூழ் சிற்றேமத்தான்
ஒளிரும்வெண்ணூன் மார்பனென்னுள்ளத் துள்ளானல்லனே. 7

சூழ்ந்ததிங்கள் வாண்முகமாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள் சூடியோராடன்மேய புண்ணியன்
தாழ்ந்தவயற் சிற்றேமத்தான் றடவரையைத் தன்றுளினல்
ஆழ்ந்தவரக்கனைல் கவன்றடர்த்த வண்ணலல்லனே. 8

தனிவெண்டிங்கள் வாண்முக மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்டிங்கள் சூடியோராடன்மேய தொன்மையான்
அணிவண்ணச் சிற்றேமத்தானலர்மேலந்த ணாளனும்
மணிவண்ணனுமுன் காண்கிலா மழுவாட் செல்வனல்லனே. 9

---

‡முக்கணன் என்றும் பாடம்.
§நீங்கிய என்றும் பாடம்.

வெள்ளைத்திங்கள்வாண்முக மாதர்பாட வீழ்சடைப்‡‡
பிள்ளைத்திங்கள் சூடியோராடன்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தார் சிற்றேமத்தானுருவார் புத்தரொப்பிலாக்.
கள்ளத்தாரைத்தானுக்கியுட்$$ காந்துவைத்தானல்லனே. 10

கல்விலோதமல்குதண் கானல் சூழ்ந்த காழியான்
நல்ல வாயவின்றமிழ் நவிலு ஞானசம்பந்தன்
செல்வனூர் சிற்றேமத்தைப்பாட சீரார் நாவினல்
வல்லராகி வாழ்த்துவாரல்லலின்றி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனூர்.

## திருக்ஷேத்திரக் கோவை.

### திருத்தாண்டகம்.

தில்லைச்சிற்றம்பலஞ்சேய்ஞலூர் செம்பொன்பள்ளி
தேவூர் சிரபுரஞ் சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர் கூழையூர்கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரிகொங்கு
அண்டர் தொழு மதிகை வீரட்டான
மையாற சோகந்தியா மாத்தூருங்
கண்டியூர் வீரட்டங் கருகாவூருங்
கயிலாய நாதனையே காணலாமே.

## திருப்பதிகக் கோவை.

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத் தமங்கை
சிற்றேமந் தெளிச்சேரி திருவுசாத்தானங்
காவிரந் திருவாலம் பொழில் வெண்ணெய் நல்லூர்
கச்சியனே கதங்காவதங்கோடிக் குழக
ராசிலிதென் குடித்திட்டை வடமுல்லை வாயி
லம்பர்ப்பெருந் திருக்கோயில் வெண்பாக்கஞ் சுழியல்
பெருமணமிந் திரநீல பருப்பதம் வேற்காடு
பேரெயில்பாற் றுறைமுக்கீச் சரமுண்டீச்சரமே.

---

‡‡விரிசடைப் என்றும் பாடம்.

$$கள்ளத்தாரைத்தனுதியுட் என்றும் பாடம்.

## திருப்பதிக்கோவை.

மேலாகும் விளமர்கா வீரம்பெரு வேளூர்
மிளிர்தலையா லங்காடு குடவாயில்சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலுமிரும் பூளைதிரு வாதைப்பெரும் பாழி
மாலூரு மவளிவணல் லூர்பரிதி நியமம்
வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச் சரநீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந்
திருவிடும்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே.

தலத்தின்பெயர்—நேமம். எழிலூர்நேமம், சிற்றேமம் திருச்சிற்றேமம் என்பன.

சுவாமிபெயர்—சொர்ணபுரீசுவரர், சொர்னேசுவரர், பொன்வைத்தநாதர், பொன்வைத்தநாயகர், பொன்வைத்தநாதேசுவரர் என்பன.

அம்மன்பெயர்—அகிலாண்டேசுவரி, அகிலாண்டநாயகி அகிலாண்டவல்லி, அகிலாண்டவல்லியம்மை என்பன.

தீர்த்தத்தின் பெயர்—சொர்ண தீர்த்தம், சொர்னபுட்கரணி, திருக்குளதீர்த்தம் என்பன. இஃது ஆலயத்தின் மேல்பாலுளது.

விருக்ஷம்—ஆத்திவிருக்ஷம். இஃது ஆலயத்தின் மேல்பால் சொர்ண தீர்த்தத்தின் கீழ்கரையிலுளது.

முற்காலத்திலே வெளிவந்துள்ள சைவசமய விளக்கவினுவிடை, சிவக்ஷேத்திர விளக்கம், சிவக்ஷேத்திரமான்மியசங்கிரகம், சிவதலமான்மியச் சுருக்கமென்னும் நூற்களிலே திருக்களருக்குத் தென்கிழக்கிலிரண்டுகடிகை¶ தூரத்திலே திருச்சிற்றேமமென்பது எழிலூர்§ நேமம், சுவாமி—பொன்வைத்தநாயகர், அம்மன்—அகிலாண்டவல்லி, தீர்த்தம்—சொர்னதீர்த்தம். விருக்ஷம்—ஆத்தி

§கடிகை—நாழிகை.
¶எழிலூர்—திருச்சிற்றேமத்திற்கு வடபாலுள ஒரு சிவதலம்.

விருக்ஷம், பதிகம்—திருஞானப் பதிகமெனவும். தற்காலத்திலே வெளிவந்துள்ள சிவக்ஷேத்திர யாத்திரானுகூலம், சிவதலமஞ்சரி என்னும் நூற்களிலே ஆலத்தம்பாடி ரயில்வேஸ்டேஷனுக்குக்கிழக்கே மூன்றேமுக்கால் மைல் தூரத்திலிருந்து வடக்கே ஒன்றேயரைக்கால் மைல் தூரத்திலே, திருச்சிற்றேமம் என்பது சிற்றும்பூர் அல்லது சிற்றுய்மூர், சுவாமி—பொன்வைத்த நாதேசுவரர், அம்மன்—அகிலாண்டநாயகி, தீர்த்தம்—சொர்ணபுட்காரணி, விருக்ஷம்—ஆத்திவிருக்ஷமெனவும். தலமுறையாக வெளிவந்துள்ள அடங்கன்முறையில் திருச்சிற்றேமம் என்பது எழிலூர் நேமம். இஃது சிற்றும்பூர், சிற்றுய்மூர் எனவும் வழங்குப. சுவாமி—பொன்வைத்தநாதர், அம்மன்—அகிலாண்டவல்லி, தீர்த்தம்—சொர்ணதீர்த்தமெனவுங் காணப்படுகின்றன.

சிவக்ஷேத்திர யாத்திரானுகூலக்காரரும் சிவதலமஞ்சரிக்காரரும் திருச்சிற்றேமம் என்பது சிற்றும்பூர் அல்லது சிற்றுய்மூரென்று(சைவசமய விளக்க வினாவிடை, சிவக்ஷேத்திரவிளக்கம், சிவக்ஷேத்திரமான்மிய சங்கிரகம், சிவதலமான்மியச் சுருக்கம் முதலிய நூல்களுக்கு மாறுபடக்) கூறியதின் காரணம் விளங்கவில்லை. சிற்றும்பூருக்கு சிற்றேமமென ஒருபெயரும், சுவாமிக்குப் பொன்வைத்த நாதேசுவரரென ஒரு திருப்பெயரும், அம்மனுக்கு அகிலாண்டநாயகியென ஒரு திருநாமமும், தீர்த்தத்திற்கு சொர்ணபுட்காரணியென ஒரு பெயரும், ஆத்திவிருக்ஷமு மிருப்பதாலெனின் அஃது பொருந்தா. ஏனெனில் !ஒருவகைப் பெயரையுடைய தலம், மூர்த்தி, தீர்த்தம்பலவுள. அன்றியும் திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களில் அவ்வத்தலங்களிலுள்ள முக்கிய விசேடங்கள் பலகாணலாம். திருச்சிற்றேமம் பதிகத்துள் சிற்றும்பூரிலுள்ள முக்கிய விசேடங்கள் யாதொன்றுங்காணப்படவில்லை. சிற்றும்பூருக்குச் சிற்றேமமென்று ஒரு பெயரிருப்பதையும் அத்தலத்துக்குத் திருப்பதிகம் இன்றென்பதையு முணர்ந்தே திருக்களருக்குத் தென்கிழக்கிலே இரண்டு கடிகை தூரத்திலே திருச்சிற்றேம மென்பது எழிலூர் நேமமெ

ன்று (சைவசமய விளக்க வினுவிடை சிவக்ஷேத்திர விளக்கம் சிவ க்ஷேத்திரமான்மிய சங்கிரகம், சிவதலமான்மியச்சுருக்கம் முதலிய நூற்களில்) குறிப்பிட்டிருக்கின்றூர்கள். திருப்பதிகம் பெற்றுள்ள சிற்றேமம்; சிற்றும்பூராயிருந்தால் திருக்களருக்குத் தென்கிழக்கிலே, இரண்டுகடிகை தூரத்திலே, திருச்சிற்றேமம் என்பது எழிலூர் நேமமென்று குறிப்பிட காரணமில்லை. ஆகையின் எழிலூருக்குத்தென்பாலுள்ள நேமம் என்னுந்தலமே திருப்பதிகம் பெற்ற திருச்சிற்றேமமென்பது திண்ணம்.

இத்தலத்தைத் தரிசிப்போர் இம்மையில் குபேரசெல்வத்தையும் மறுமையில் மோக்ஷத்தையுமடைவர்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு—திருக்களரிலிருந்து முத்துப்பேட்டை போகும் சாலைமார்க்கமாய்த்தெற்கே ஒன்றரை மைல் சென்று அங்கிருந்து கிழக்கே திரும்பி திருத்துறைப்பூண்டி போகும் சாலைமார்க்கமாக அரைமைல்சென்று சாலுவன்ஆற்றைக்கடந்து அரைமைல் சென்றுலும்; திருத்துறைப்பூண்டி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே கரைமார்க்கமாக அரை மைல் சென்று மறைக்காக்கரை என்னும் ஆற்றைக்கடந்து சாலைமார்க்கமாக ஒன்றரை மைல் சென்றுலும் சப்தரிஷிகள் பூசித்த எழிலூர்த்தலத்தையும் அதன் தென்பாலுள்ள திருச்சிற்றேமத்தலத்தையுமடையலாம்.

திருச்சிற்றேமச் சிவக்ஷேத்திர விளக்கம்

முற்றிற்று.